APPLE BOOKS

நம்பிக்கை

சிறுவர் கதைகள்

பாபநாசம் குறள்பித்தன்

(தமிழக அரசு விருது பெற்ற எழுத்தாளர்)

நம்பிக்கை

(சிறுவர் கதைகள்)

பாபநாசம் குறள்பித்தன்

(தமிழக அரசு விருது பெற்ற எழுத்தாளர்)

APPLE BOOKS®

நம்பிக்கை

ஆசிரியர்: பாபநாசம் குறள்பித்தன்

காப்புரிமை © 2014 ஆப்பிள் பப்ளிஷிங் இண்டர்நேஷனல் (பி) லிமிடெட்

காப்புரிமைச் சட்டத்தின் கீழ் இந்நூல் பதிவு செய்யப்பட்டுள்ளது. வெளியீட்டாளரின் எழுத்து மூலமான அனுமதி இன்றி, இந்நூலை மறுபதிப்பு செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, நகல்படி எடுக்கவோ, மின்னணு வழியாக பதிப்பிக்கவோ கூடாது.

ISBN: 978-93-5055-165-3

முதற்பதிப்பு: ஜனவரி 2014

வெளியீடு: ஆப்பிள் பப்ளிஷிங் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்
130, நெல்சன் மாணிக்கம் ரோடு சென்னை – 29. இந்தியா
தொலைபேசி : +91 44–3244 0099, +91 44 3246 4677
தொலைநகல் : 91–44–26211085
மின்னஞ்சல் : cs@applebooks.org இணையதளம் : www.applebooks.org

அட்டை வடிவமைப்பு: சு. கதிரவன்

ஓவியங்கள் : விவேகன்

அச்சாக்கம்: சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிட்

Nambikkai

Author: Pabanaasam Kuralpithan

Copyright © 2014 Apple Publishing International (P) Ltd.

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without prior written permission of the publisher.

Apple Books is a registered trademark of Apple Publishing International (P) Ltd.

ISBN: 978-93-5055-165-3

First Impression: January 2014

Published by Apple Publishing International (P) Ltd.
130, Nelson Manickam Road, Aminjikarai, Chennai 600 029, India
Email: cs@applebooks.org Web: www.applebooks.org

Cover Design: S. Kathiravan

Illustrations: Vivegan

Printed in India by Chennai Micro Print (P) Ltd.

இனிய குட்டீஸ்களுக்கு...

என் பாராட்டும், வாழ்த்துகளும்.

நல்ல உணவைத் தேடி சாப்பிட்டால்தான் உடல்நலம் பெறும். அப்படியே நல்ல நூல்களை நாடிப் படித்தால்தான், அறிவு வளம்பெறும்; அதன் வழியே எதிர்கால வாழ்வில் ஒளி வரும்...

அதற்கு இந்நூலிலுள்ள (என்) கதைகள் படிக்கட்டுகளாக அமையும் என்று நம்புகிறேன்...

படியுங்கள், நண்பர்களையும் படிக்கச் சொல் வீர்கள் என்பது எனக்குத் தெரியும்...

அன்புடன்,
குறள்பித்தன்

பொருளடக்கம்

1. ஒற்றைக்கால் தவம் / 1

2. சில்லரைகள் / 5

3. ஒற்றைச் சக்கரம் / 9

4. வெள்ளைக் கொடி / 12

5. நியதி / 17

6. மௌன யுத்தம் / 20

7. தீர்வு / 24

8. மரபு / 31

9. காலக் கணக்கு / 34

10. நீர்க்குமிழி / 39
11. மனக்குறை / 43
12. உழைப்பு / 49
13. ஆணவம் / 52
14. நம்பிக்கை / 55
15. சிரிப்பு / 58
16. யார் விடை கூறுவது? / 61
17. முகமூடி ! / 64
18. பட்டையும் 'பட்டையும்' / 70

1. ஒற்றைக்கால் தவம்

ஓரே ஒரு முறை சிரித்ததற்காக எங்களின் இதழ் மேனியில் இறைவன் மரண சாசனத்தை ஏன் எழுத வேண்டும்?

நாங்கள் மென்மையானவர்கள் என்பதால்தான், எங்கள் மரணமும் மென்மையாக நடக்கிறதோ?

எங்களின் பார்வைக்காகவே விழிகளைத் திறக்கிறோம்... இருந்தும் வாழ்க்கை என்னவோ இருளோடு முடிபோடப் படுகிறது.

எங்கள் இனம் ஒற்றைக்கால் கொண்டதுதான். அதனால், நடக்க முடியவில்லையே என்று வருத்தப்படுவதில்லை.

இதுவரை நாங்கள் யாரையும் தேடிச் சென்றது இல்லை.

இருகால் உள்ளவர்கள் முதல், ஆறுகால் பெற்ற வண்டுகள் வரை எங்களையே தேடி வருவார்கள்.

இது கர்வத்தால் பிறந்த கவிதைப் பிரசவ மல்ல; நீண்ட நெடுங்காலமாக நிலவுகின்ற மரபு.

எங்களில் சிலர் இரவிலே கண்விழிப்போம்; சிலர் பகலில் கண் விழிப்போம்.

இரவில் மலரும் நாங்கள் வெள்ளை நிறத்தோடும், பகலில் மலரும் நாங்கள் வண்ண மேனியுடனும் இருப்போம்.

எங்களின் வாழ்க்கையில், இரண்டு வகையில் புனிதத் தன்மையை அடை கிறோம்...

இறைவனின் பாதக் கமலங்களில் விழும் போதும்; பாவங்களை மறந்து, துரோகங் களைத் துறந்து, உயிர் கூட்டைப் பிரிந்து இந்த உலகை விட்டுப் போகும் மனிதர்களின் மேல் விழும்போதும்தான்.

நாங்கள் எப்போதெல்லாம் வருந்து வோம்..?



உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனிதர்கள் கழுத்தில் விழும்போதும்; நன்றி கொன்ற நயவஞ்சக மனித நரிகளின் கழுத்தில் விழும்போதும்; ஒழுக்கம் தவறிய ஓநாய் மனிதர்களின் கழுத்தில் விழும் போதும்...

'விண்மீன்களைப் பழித்திட்டு மண்ணில் மின்னும் வைரங்கள்' என்றும் 'இறைவன் மணமாக எழுதி வைத்த பட்டயங்கள்' என்றும் கவிஞர்கள் எங்களை எழுது கிறார்கள்.

அவர்களே எழுதிய மை காய்வதற்குள், அதே கையால் எங்களைக் கொலை செய் கிறார்கள்... ஏன் இந்த முட்டாள்தனமான முரண்பாடு...?

எங்களின் தோற்றம் புனிதமானது; முடிவோ சோகமானது...!

உயிர்க் கொடியின் இலை நுதலில் பொட்டாக இருந்த அந்த மலர்கள், இதழ் ஆடைகளை அவிழ்த்தபடியே மரண மேடையில் உதிர்ந்துகொண்டிருந்தன! ❖

2. சில்லரைகள்

கோபுரத்தில் இருந்த ஒவ்வொரு பொம்மையும், 'என்னைத்தான் மக்கள் வணங்கிச் செல்கிறார்கள்' என்று தனித்தனியே நின்று தம்பட்டம் அடித்துக் கொண்டு இருந்தது.

அன்று உற்சவ நாள்...!

கோபுரம் முழுதும் மின் விளக்கு அலங்காரம்; வண்ணப்பூச்சிகள்; வானவெடி வர்ண ஜாலங்கள். பொம்மைகளுக்கு எல்லாம் ஒரே பூரிப்பு!

பக்தர்கள் எல்லாம் கழுத்து சுளுக்கும் வரை அண்ணாந்து பார்த்தபடி நின்றார்கள். பின், வரிசை வரிசையாகக் கோயிலுக்குள் சென்றார்கள்.

‘இவர்கள் எங்கே போகிறார்கள்?’

பொம்மைகள் ஒன்றை ஒன்று கேள்விக்குறி யோடு பார்த்துக்கொண்டன.

பின்னர், கீழே வந்தன. வரிசையில் நின்றன; உள்ளே சென்றன...

அங்கே...

பக்தர்கள் பக்திப் பெருக்கினோடு கரு வறையில் இருந்த லிங்கத்தை வணங்கியபடி மீண்டுகொண்டிருந்தார்கள்.

கருவறையில் எந்தவித ஆடம்பரமும் இல்லை; அலங்காரமும் இல்லை...

கோபுரத்துப் பொம்மைகள் ஒன்று கூடின; உறவோடு பார்த்துக் கொண்டன...

‘இதுநாள்வரை இந்த மனிதர்கள் எல்லாம் வீதியிலிருந்து வணங்கிச் சென்றபோது எல்லாம், நம்மைத்தான் வணங்குகிறார்கள்’ என்று ஆணவத்தோடு இருந்தோம்.

‘நாம் உயரத்தில் இருந்தமையால்தான் உயர்வைப் பெற்றோம்’ என்று இறுமாப் போடு இருந்தோம்.



உயரத்தில் இருப்பவர்கள் எல்லாம், உயர்ந்தவர்கள் அல்ல என்பது பறந்துகொண்டிருக்கும் புழுதிகளைப் பார்த்த பிறகும் நமக்குத் தெளிவு வராமல் போய்விட்டதே! என்று எண்ணி உள்ளத்தால் வருந்தியபடி பொம்மைகள், கோபுரத்தை நோக்கி நகர்ந்தன; தத்தம் இடங்களில் அமர்ந்தன!

❖

3. ஒற்றைச் சக்கரம்

கண்ணாடிக் கூண்டிற்குள் அண்ணன் தம்பிகளாய் இருந்தவைகளுக்குள் பங்காளிச் சண்டை உருவெடுத்து விட்டது.

“என்மேல் உட்கார்ந்து கொண்டு உலா வருகின்ற உனக்கு இப்போது என்ன வந்தது?”

“என்ன வந்ததா?... நீ என் கீழே இருந்து கொண்டு இருப்பதே உறுத்தலாக இருக் கிறது. நீ என்னைக் காரியமாகத்தான் சுமந்துகொண்டு இருக்கிறாய். நான் இல்லாது போனால் உனக்கு ஏது மதிப்பு...?”

காலம் நகர்த்திய வழியில், தன் கண்ணீர்ப் பயணத்தைத் தொடர்ந்தது சின்னமுள்.



சின்ன முள், பெரிய முள்ளை விட்டு தன் நீண்ட நாள் உறவை முறித்துக்கொண்டது.

இப்போது பெரிய முள் கலகலப்போடு வாழ்க்கைப் பாதையில் ஓடிக்கொண்டு இருந்தது...!

'சின்னமுள் இருந்தாலாவது காலம் ஒழுங் காகத் தெரியும் – இந்தப் பெரிய முள் ஏன் வீணாகச் சுற்றிக்கொண்டு கிடக்கிறது?' என்று நினைத்த அதன் சொந்தக்காரன் அதை மூலையில் எடுத்துப் போட்டான்.

இரண்டு முள்களின் முகங்களும் இருண்டு போயின.

❖

4. வெள்ளைக் கொடி

அடிமண்ணில் ஆயிரம் விழுதுகளைப் பதித்துக் கொண்டு பல ஆண்டுகளாக மூலவேர் இல்லாமல் நிமிர்ந்து நின்று இருந்தது, அந்த ஆலமரம்.

அந்த ஆலமரத்தில் எத்தனையோ குடும்பங்கள் கல்லையும் மண்ணையும் சேர்த்துக் கட்டாமல், வாடகை ஏது மில்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தன.

அங்கே...

வாயால் தின்று வாயால் ஜீரணிக்கும் – பறவையிலும், விலங்கிலும் சேராத அலிப்பறவை – வெளவாலும், திருட்டுப் பறவை என பலரால் பேசப்படும் காக்கையும், பகலில் விழி ஒளி இழந்து,

இரவில் விழிதிறக்கும் பறவையான ஆந்தையும் அந்த மரத்தில் இடம்பிடித்துக் கொண்டிருந்தன. ஒருநாள் சூரிய உதயம்.

காக்கையின் வீட்டில் இரண்டு இளசுகள். காக்கைக் குஞ்சு சிவந்த இதழை சினத்தோடு திறந்து, “நீ என்னினம் இல்லை. இருந்தும் என் தாயை எப்படியோ மாற்றிவிட்டாய். உன்னை இங்கிருந்து வெளியேற்றாமல் நான் இருக்கப் போவதில்லை” என்று கொத்தியது.

குரலால் சிறப்புப் பெற்ற அந்த இளைய குயில், “நாம் இனத்தாலும், நிறத்தாலும் ஒன்றுபட்டவர்கள். என் தாய் என்னைக் காப்பாற்ற முடியாதவர் அல்ல. தனது இசையறிவை இந்த உலகம் முழுதும் உரத்துக் காட்ட வேண்டும் என்ற காரணத்தால் தன் இறகை விரித்தபடியே அலைந்துகொண்டிருக்கிறார். அவர்மீது எந்தவிதமான தவறும் இல்லை. அதனால்தான், தனது அக்காவான உனது தாயிடம் என்னைச் சேர்த்திட்டார். நீ வருத்தப்படாதே, கோபப்படாதே” என்றது.



காக்கைக்குக் குஞ்சு சமாதானம் ஆக வில்லை. சண்டை தொடர்ந்து கொண் டிருந்தது...

கோடு விழாமல் வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு கழுகின் ஓர விழியில் இந்த இனப்போர் எப்படியோ தட்டுப் பட்டுவிட்டது. அடுத்த நொடியே...

“சின்னப் பறவைகளே! ஏன் இப்படி சண்டைப் போட்டுக்கொள்கிறீர்கள்? மனித இனத்தைவிட மோசமானவர்களாக இருக் கிறீர்களே! உங்களை நான் சமாதானப் படுத்தி வைக்கிறேன்” என்றதும்,

காக்கைக் குஞ்சு, “அப்படியே உடன் செய்யுங்கள்” என்றது.

“அடுத்த காட்டில் நமது நீதிமன்றம் இருக்கிறது. ஒவ்வொருவராக அழைத்துச் செல்கிறேன்” என்று கூறி, முதலில் காக்கைக் குஞ்சைத் தூக்கிப் பறந்து சென்றது.

சில நொடிகள் சென்றபின்...

மீண்டும் வந்து குயில் குஞ்சைத் தூக்கிச் சென்றது. இப்போது அந்த இரண்டு

குஞ்சுகளுக்கிடையில் இனப்போர் இல்லை. இரண்டும் சமாதானம் ஆகிவிட்டன.

ஆம்...

கழுகின் வயிற்றிலே இரண்டும், சரிசம மாகக் கைகுலுக்கிக் கொண்டன.

❖

5. நியதி

பனி பெய்து, செடி, கொடி, மரங்களின் இலைகள்மீது இருந்த தூசிகளை எல்லாம் கழுவிக்கொண்டிருந்தது.

கீழ் வானில் சிறிதே வெள்ளையடிக்கத் தொடங்கியது, சூரியன்.

தாவரங்கள் பனியில் தலை நனைத்து உலர்த்தாமல் அசைந்துகொண்டு இருந்தன.

பறவைகள் கூட்டில் இருந்து வெளிப்பட்டு, இறகுகளில் நெட்டி முறித்துக்கொண்டன. ஆங்காங்கே புள்ளினத்தின் பூபாளம். சில, இறகை விரித்து இரை தேட பயணம் தொடங்கின.



இயற்கை விரித்துப் போட்ட சுருட்ட முடியாத 'பாயில்', பாவை ஒருத்தி நீர் தெளித்தாள்...

ஓலை நரம்புகளை ஒன்றிணைத்துக் கட்டிய துடைப்பத்தால் துப்புரவு ஆக்கப்பட்டு, மருதாணியிட்ட விரல்களால் கோலப் பொடியை எடுத்து மண்ணில் அளவாகப் பொட்டு வைத்தாள்.

'என்ன நம்மை இப்படி தனித்தனியே தனிமைப் படுத்திவிட்டாளே...' என்று புள்ளிகள் புலம்பத் தொடங்கின...

சிறிது நேரத்தில்..

மீண்டும், வெண்மை நிறக்கோலப்பொடியை அவளது அழகு இரு விரல்களுக்கிடையே எடுத்து, மண்ணில் முன்பு வைத்திருந்த புள்ளிகளுக்கிடையே கோடுகளாய் இழுத்தாள்...

அடடே... அங்கே மண்ணில் காம்பில்லா பூக்கோலம் பூத்துச் சிரித்தது! அதே நேரம், 'இப்படி நம்மை எல்லாம் தனித்தனியே சிறைப்படுத்திவிட்டாளே...' என்று கோபத்தோடு புள்ளிகள் புலம்பத் தொடங்கின! ❖

6. மௌன யுத்தம்

ஒன்பது மணி நேரத்திற்குப் பின் வியர்வையில் நனைந்து, வெயிலில் காய்ந்து, சுடுமணலில் தூக்கிப்போட்ட புழுபோல சுருக்கத்தோடு தன்னை இடம்மாற்றிக் கொண்டது அந்தச் சட்டை!

அழுக்கோடு தன்மீது வந்து தொற்றிக் கொண்ட சட்டையைப் பார்த்து 'ஹேங்கர்' எதுவுமே கூறவில்லை.

ஆனால், காலையில் சட்டை பேசிய வார்த்தைகள் மட்டும் உள்ளத்தில் தீப் புண்ணாய் எரிந்துகொண்டிருந்தது...

"என்னைப் பார்த்தாயா? எவ்வளவு வெண்மையாக, ஞானிகளின் இதயத்தைப் போல் சுருக்கம் இல்லாது எவ்வளவு அழகாக

இருக்கிறேன்! நீயும்தான் இருக்கிறாய்; நீயெல்லாம் ஒரு ஜென்மம்!

என்னைச் சுமப்பதற்காகவே பிறந்த ஜடம்! ஆனால், என்னைத்தான், என்னை அணி பவனும் சுமக்கிறான். நீயும் சுமக்கிறாய்!" என்று –

தன்னிலையும் அடிக்கடி மாறும் என்பதை மறந்து பேசிய சட்டையைப் பற்றி அசை போட்டுக் கொண்டேயிருந்தது 'ஹேங்கர்'.

மறுநாள், கால மகள் தன் வான வீட்டில் கிழக்கில் அடுப்பேற்றும் நேரம்...

நேற்றைய அழுக்கை நீரில் விட்டது சட்டை. அதற்கு முன்பே மாடிக் கயிற்றில் ஒற்றைக்கையால் ஊஞ்சல் ஆடிக்கொண் டிருந்தது, ஹேங்கர்.

அதன் ஆட்டத்தைக் கண்டு பொறாமை கொண்ட சட்டை, தன் ஈரமேனியை வீரமுடன் அதன் மேல் போட்டு அமுக்கிக் கொண்டது.

சட்டையின் திடீர்த் தாக்குதலால் திணறிப் போனது ஹேங்கர். மூச்சு விடமுடியாமல்



தவித்த நிலையில் அந்தக் காலைக் காற்றில் தன்னுடலைக் கொஞ்சம் உதறிப் போட்டது...

அடுத்த நொடியே...

பழைய நிலையில் அதன் ஊஞ்சலாட்டம் உற்சாகமானது, பாவம்...!

மாடிக்குக் கீழே இருந்த சாக்கடை நீரில் தன் உடல் உள்ளே அமுங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்த அந்தச் சட்டை, தன் பட்டன் விழிகளால் ஹேங்கரைப் பரிதாபமாய்ப் பார்த்தது.

அந்தப் பார்வை, "என் ஆணவத்திற்கு இந்த அரிச்சுவடிப் பாடம் தேவைதான்!" என்பதுபோல் இருந்தது.

சட்டையின் சடலம் சாக்கடையில் சமாதி ஆகிப் போனது.

ஆனால், அப்போதுகூட அந்த 'ஹேங்கர்' எதுவுமே பேசவில்லை...

❖

7. தீர்வு

உடலின் மச்சத்தைப் போல் ஐப்பசி மாத இரவு இந்த உலகைக் கவ்விக்கொண் டிருந்தது.

கார்கால மேகங்கள் பெருக்கல் கணக்கைப் போல் பெருகிய நிலையில் விடைகளாக மழைத்துளிகளை உதிர்த்துக்கொண் டிருந்தன.

அந்த வேளையில்...

தேனீக்கள் சேர்ந்து கட்டாத 'மேக' அடையில் எப்படியோ ஒழுகல் ஏற்பட்டு விட்டது.

பூ மழை...! தூறல்...! பெருமழை. இப்படி தொடர்ந்தது.

அந்த நீண்ட நெடுஞ்சாலையில் ஒரு சத்திரம், அறுபது ஆண்டுகளாக நின்று கொண்டு இருந்தது.

சத்திரத்திற்குள் வந்து நின்ற நாய் தன் மேனியில் விழுந்த மழைத்துளிகளை உதறியது...

இருந்தாலும், மழையில் நனைந்திருந்ததால் அதன் மேனியில் நடுக்கம் இல்லாமல் இல்லை.

சத்திரத்தின் மூலையில் அது தன் மூளைப் பகுதியை வைத்துப் படுத்துக் கொண்டது.

அந்த வேளையில் அது இனத்து நாய் ஒன்று, சத்திரத்துக்குள் ஒண்ட வந்தது.

மேனிப் புறக்களில் இருந்த மழைத்துளிகளை மெள்ள உதறியது...

அந்த ஒலி கேட்டு நீண்ட சத்திரத்தின் ஒரு மூலையில் உறங்கிக்கொண்டு இருந்த நாயின் விழிகள் திறந்தன.

அதன் விழிகளுக்குள் கீழ்வானச் சிவப்பு...



‘யார் இவன்? நமக்கு எதிராக இந்த நேரத்தில் இடையூறாக வந்தவன்...? இவனை இங்கே தங்கவிடக் கூடாது...’

நாயின் நரம்பு மண்டலத்தில் இப்படியெல்லாம் வினாக்குறிகள் விளையாடின.

அடுத்த நொடியே ஆக்ரோசமான அதனுடைய வார்த்தைகள் வடிவம் பெற்றன...

“அற்பனே! இது என்னுடைய இருப்பிடம்... இந்த இடத்தில் தங்குவதற்கு எனக்கு மட்டுமே உரிமை உள்ளது. நீ வெளியில் போ...” என்றபடியே வந்த நாயை, அங்கே இருந்த நாய் கடித்துக் குதறியது.

பணக்காரன் முன்பு ஏழை தோற்றுப் போவதைப் போல், அந்த வலிமையான நாயின் முன், வந்த நாய் எளிமையாய் இருந்ததால், தோல்விப் பள்ளத்தில் துவண்டு விழுந்தது.

முன்பே மழையில் நனைந்திருந்த அந்த நாய் மீண்டும் நனைந்துகொண்டு இருந்தது.

அதைத் துரத்திய நாய் மீண்டும் சத்திரத்தில் படுத்துக்கொண்டது, நிம்மதியாக!

மேனி நடுக்கத்தோடு மழையில் நின்றுகொண் டிருந்த நாய் நினைத்தது, 'நம் இனம்தானே?... நமக்கு இடம் தரலாமே...'

இந்தப் பரந்த சத்திரத்தில் ஆயிரம்பேர் தங்கலாமே! அப்படி இருந்தும் ஏன் நமக்குக் கொஞ்சம் இடம் கொடுக்கக் கூடாது?

ஏன் நம்மை அப்படி கடித்துக் குதறியது? கடிந்துகொண்டது.' அதன் மேல் இருந்து, குருதி வடிந்து, மழை நீரில் கரைந்து ஓடிக் கொண்டிருந்தது...

அதே வேளையில் அந்தச் சத்திரத்தில் வழக்கமாகத் தங்கிப் படுக்கின்ற பிச்சைக் காரன் ஒருவன், தள்ளாடித் தடி ஊன்றிய படியே வந்து சேர்ந்தான்...

'நாம் படுக்க வேண்டிய இடத்தில் இந்த நீர்ச் சிதறல்கள் எப்படி வந்தன...?'

காலால் தேய்த்துப் பார்த்தவன், தன் வலப் பக்கத் தோளில் தொங்கிய பையில் இருந்து தீப்பெட்டியை எடுத்தான்...

‘வெளிச்சப் பறவை சில நிமிடங்கள் அங்கே பறந்தன... மூலையில் படுத்திருந்த நாயின் முகம் முழுதாய் அவனுக்குத் தெரிந்து போனது...

அவன் ஊன்றி நடக்கும் கோல், கொடுங்கோலானது...

‘வாள்... வாள்’ என்றபடியே காலின் இடுக்கில் தன் வாலை நுழைத்துக்கொண்டு ஊளையிட்டபடியே வெளியில், அடிபட்ட வலியோடு ஓடியது நாய்...

இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு வெளியில் நின்ற நாய், சிரிக்கவில்லை; சிந்திக்கத் தொடங்கியது... அதன் மேனி முழுதும் கங்கையின் குளிர்ச்சி...

அடிபட்டு, உதைபட்டு, கால் நடக்க முடியாமல் வந்த நாய், மழையில் நனைந்து கொண்டு இருந்த நாயோடு இணைந்து கொண்டது... அதன் இதயம் திறந்து கொண்டது...

“சில நிமிடங்களுக்கு முன், என் இனமான உன்னையே நான் சேர்க்கவில்லை...

அப்போது ஆணவப் பேய் என்னுள் குடி கொண்டிருந்தது. இப்போது நானும் உன் னோடு வீதியில். மேக நீரில் என் குளியலும்...

அந்த ஆணவம் மட்டும் அப்பொழுது இல்லாது இருந்திருந்தால், இப்பொழுது எப்படி இருக்கும்?" என்ற நினைத்தவாறு, சண்டை போட்ட தன் இனத்தோடு - வந்த நாய் சேர்ந்து நடக்கத் தொடங்கியது...

அதன் உடலில் இருந்து மெள்ள ஆணவப் பேய் வெளியேறிக்கொண்டிருந்தது!

❖

8. மரபு

தாமரையும், அல்லியும் ஒரே குளத்தில் மலர்ந்து சிரித்தன.

காலைக் கதிரவனின் பொற்கதிர், தன் மேல் பட்டதும் மெள்ள இதழ் அவிழ்த்த தாமரை உலகை, உவகையோடு பார்த்தது.

தன் பக்கத்திலேயே கூம்பிய நிலையிலிருந்த அல்லியைப் பார்த்து, 'நீ பகலிலே ஏன் மலர மாட்டேன் என்கிறாய்?' என்று கேட்டது.

அல்லி, பெருமையோடு சொல்லியது:

"நான் நிலவரசன் வந்தால்தான் மலர்வேன். ஏனென்றால், அவனது தூய ஒளியைத்தான் என் பொன்மேனித் தழுவும்; உன்னைப் போல் சூரிய ஒளியைத் தழுவாது, ஏன் தெரியுமா...?"



“கதிரவனிடம் குளிர்த் தன்மை கிடையாது. அவனது ஒளி நெருப்பினும் கொடியது; அதைக் காணச் சகியாமல்தான் நான் நிலவொளியில் என் பொன்மேனியைத் திறக்கிறேன்...” என்று கூறிவிட்டு...

“நீ ஏன் என்னைப் போல் இரவிலே மலரக் கூடாது?” என்றும் அல்லி கேட்டது.

தாமரை ஏளனத்தோடு கூறியது...

“கதிரவனிடம் வெம்மை அதிகம் என்று நீ கூறுகிறாய்... உண்மைதான். ஆனால் உன் நிலவரசனைப் போல் என் தலைவனிடம் கலங்கமில்லையே...!

அதனால்தான் நான் நிலவின் ஒளியிலே என் மேனியைத் திறக்காது, மூடிக்கொள் கிறேன்” என்று.

அல்லி மவுனக் கவிதை எழுதியது. தாமரையோ மரபுக் கவிதை எழுதியது.

காலமகள், இருவரது பேச்சையும் கேட்ட படியே நிலவையும், சூரியனையும் இரு பந்துகளாக கைகளில் வைத்து விளையாடிக் கொண்டு இருந்தாள்! ❖

9. காலக் கணக்கு

எருக்கம் பூ மலர்ந்திருந்தது. அதற்கு அருகி லேயே முல்லைக் கொடியும் உயர்ந்து, படர்ந்து மலர்ந்து இருந்தது. இரண்டும் பேசிக்கொண்டன...

முதலில், முல்லை மகிழ்ச்சியுடனும், ஆணவத்துடனும் பேசியது...

"எழிலற்ற எருக்கன் பூவே! என்னைப் பார்... நான் எவ்வளவு எழிலோடு இருக் கின்றேன்.

நான் மலர்ந்தால் போதும், என்னை வந்து வட்டமிட்டுக் கருவண்டுகள் இன்னிசை பாடும்.

என்னைப் புகழாத கவிஞர்களே இல்லை. நான் இதழ் திறந்தால் போதும்; நங்கையர்

என்னை நாடி வந்துவிடுவர். தென்றலுக்கு நறுமணம் இல்லாததால் என்னிடமே அது பெற்றுச் செல்லும்.

இறைவன் கழுத்திலே எழிலோடு புரள்வேன். ஏற்றமிகு தலைவர்களின் கழுத்திலே பெருமையோடு குடியேறுவேன்.

இப்படி எனக்குப் பல சிறப்புகள் உண்டு.

உனக்கோ எவ்விதப் புகழுமே இல்லை. உன்னைப்போல் நானிருந்தால் மலராமலேயே இருந்து விடுவேன்" என்றது.

அதைக் கேட்ட எருக்கம் பூ, தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டு கூறியது...

"என்ன செய்யட்டும் முல்லை! உன் வாய்ப்பு எனக்கு இல்லை. என் நிலை இது. உன் நிலை அது!

நம்மைப்போல் மனிதர்களிலும் வேறுபாடுகள் நிரம்ப உண்டு.

நீ கூறியதுபோல் நானும் இறந்துவிடலாம், புகழில்லாத மனிதர்கள் எல்லாருமே இறப்பதில்லையே! புகழோடு இருப்பவர்கள்



எவர் முடிவுமே சிறப்பானதாக இருப்ப தில்லையே...!

அவர்கள் நிலையே அப்படி இருக்கும்போது, என் நிலைக்காக நான் வருந்தி என்ன பயன்?" என்றது அடக்கத்துடன்.

சிறிது நேரத்தில் காதலர்களின் சிந்தனை போல் கருமேகங்கள் வானில் சூழ்ந்தன.

கடும்காற்று வீசிற்று; பேய் மழை கொட்டியது!

கண் விழித்து எழிலோடு இருந்த முல்லை மலர், எருக்கம் பூவின் வேர்ப் பகுதியில் வந்து வீழ்ந்தது.

என்னே இயற்கையின் விளையாட்டு...!

முல்லை மலர் நாணத்துடன் தலைகுனிந்து கிடந்தது கீழே!

மெள்ளக் கேட்டது எருக்கம்பூ...

"எழில் முல்லையே! கவிஞர்கள் பாடு முன்னே கன்னியர்கள் நாடும் முன்னே, இறைவனின் கழுத்தை அலங்கரிக்கும் முன்னே, காற்றிற்கு மணம் ஊட்டும் முன்னே, என் காலடி வந்து அடைக்கலமாகி

விட்டாயே! உனக்காக நான் உளம் கசிந்து வருந்துகிறேன்" என்றது.

அதைக் கேட்ட முல்லை, தலைகுனிந்தபடியே, "உயரத்தில் இருப்பவர்கள் உள்ளத்தால் உயர்ந்ததை நினைக்க வேண்டுமே தவிர, பிறர் உள்ளத்தைப் புண்படுத்தும் சொற்களைக் கூறுதல் கூடாது. இது எனக்கு ஏற்ற தண்டனைதான்..." என்றது மனம் திருந்திய நிலையில்.

எருக்கம்பூ அதன் நிலைக்காக வருந்தியது.

அப்பொழுது, அங்கே மலர்கொய்ய வந்த ஒருவர், விநாயகருக்குச் சூட எருக்கம்பூவைப் பறித்துப் போனார்.

❖

10. நீர்க்குமிழி

அரும்பின் மேல் அமர்ந்து இருந்த பனித் துளி, அரும்பிடம் வேண்டிக் கொண்டது:

“அரும்பே! நீ உன் இதழ்களைத் திறந்து என்னை உன்னுள் ஏற்றுக் கொள், நான் உன்னுள் கலக்க விரும்புகிறேன்” என்றது.

அரும்பு முகம் மூடிய நிலையில் இருந்த படியே கூறியது: “பனித்துளியே, நானும் உன்னை என்னுள் இணைத்துக் கொள்ளவே விரும்புகிறேன், ஆனால்...”

“ஆனால் என்ன?” பனித்துளி கேட்டது.

“இன்னும் நான் மலரவில்லையே...” மலரின் பதில் இது.



"எப்போது மலர்வாய்?" பனித்துளியின் கேள்வி இது.

"காலையில்..."

"அப்படியா... சரி. அதுவரை நான் இங் கேயே இருக்கிறேன்" என்றது, பனித்துளி.

காலம் உருண்டது. காலை வந்தது, மலரும் மலர்ந்தது.

மலர்ந்த மலர், தன் மேல் இருந்த பனித் துளியைத் தேடியது! பனித்துளியை எங்கும் காணவில்லை; ஏங்கியது மலர்...

இரவு வந்தது. பனித்துளியும் வந்தது, விரிந்த மலரில் விழுந்த பனித்துளியைப் பார்த்து, மலர் கேட்டது:

"இவ்வளவு நேரம் நீ எங்கே சென்று இருந் தாய்? உனக்காக 'ஒற்றைக் காலில்' நான் எவ்வளவு நேரம் காத்துக்கொண்டு இருக் கிறேன் தெரியுமா?" என்றது.

பனித்துளி கூறியது, "எனக்கு இப்போதுதானே விடுதலை கிடைத்தது..."

அதே நேரம் மலருக்கு செடியிலிருந்து 'விடுதலை' கிடைத்து, மண்ணில் விழுந்தது!

காலம் 'களுக்'கென்று சிரித்துக்கொண்டது.

❖

11. மனக்குறை

முல்லை, மல்லிகை, ரோஜா மற்றும் பல மலர்களும் கூடி ஒருநாள் இறைவனிடம் சென்று முறையிட்டன.

எல்லா மலர்களின் சார்பாகவும் ரோஜா பேசியது. "இறைவனே! எங்களுக்கு நல்ல அழகு கொடுத்து, மணம் கொடுத்து, நாங்கள் மலர்ந்ததும் உலகில் எத்தனை பொன்வண்டுகள் உண்டோ அத்தனையும் எங்களைச் சுற்றிப் பாடும்படி விடுகிறாய்...

கவிஞர்களை, நாங்கள் மலர்ந்ததும், பாடல் பாடச் செய்கிறாய்.

இப்படி எங்கள் புகழை உயர்த்தி உள்ள நீ, ஏன் எங்களை ஒரே ஒரு நாளில் மாய்த்து விடுகிறாய்...?

எங்களுக்கு மென்மையும், அழகும், மணமும் இல்லாவிட்டாலும் போகட்டும். நாங்கள் நீண்ட நாள் வாழ எங்களுக்கு வரம் கொடு...” என்று.

இதைக் கேட்ட இறைவனும் சிரித்தபடியே, “சரி, உங்கள் விருப்பம் போலவே தந்தேன்; போங்கள்” என்றார்.

மலர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு திரும்பின.

காலம் சுழன்று ஓடியது!

மலர்கள் மலர்ந்தன, மகிழ்ந்தன. ஆனால் அந்த மகிழ்வு...?

“ஏன் இன்று நம்மைப் பாட கவிஞர்கள் வரவில்லை?”

“ஏன், இன்று நம் அழகில் மயங்கிக் கன்னியர்கள் நம்மைக் கொய்து செல்ல இன்னும் வரவில்லை?”

“ஏன் இன்னும் இசைபாட வண்டினங்கள் வரவில்லை?”

இப்படி நித்தம் நித்தம் மலர்கள் எல்லாம் தங்களுக்குள் வினா எழுப்பி நின்றன.

மீண்டும் மலர்கள் எல்லாம் ஒன்றுகூடின.

இதற்குக் காரணம் என்ன என்று ஆய்ந்தன. ஒன்றும் புலப்படவில்லை. காரணம் அறிந்திட, இறைவனை நாடிப் போய்க் கேட்பதே நலமென்று எண்ணின, எல்லா மலர்களும்...

அதன்படியே கடவுளின் திருவடியை நாடிக் கேட்டன...

"ஏன் முன்புபோல் எல்லோரும் எங்களை விரும்புவது இல்லை?" என்று.

இறைவன், இளநகை புரிந்தபடியே சொன்னார்:

"உங்களுக்குச் சிறப்பாக இரண்டு தன்மைகளை நான் கொடுத்திருந்தேன்..

ஒன்று, மணம்; மற்றொன்று, எழில். அந்த இரண்டையும் நீங்கள் நீண்ட நாள் வாழ்ந்தால் பெற முடியாது.



ஒன்றைக் குறைத்துதானே மற்றொன்றைக் கொடுக்க முடியும்? அது இரண்டும் இல் லாதபோது உங்களை யார் விரும்புவார் கள்..?" என்றார்.

உடனே, மலர்கள் எல்லாம் முறையிட்டன...

"இறைவா! பல காலம் வாழ்ந்து, புகழ் இல் லாமல் சாவதைவிட, ஒரு நொடியே வாழ்ந்தாலும், புகழோடேயே வாழ ஆசைப் படுகிறோம்...'

மீண்டும் எங்களுக்கு மணத்தையும், எழிலை யும் கொடுத்துவிடு" என்று கேட்டன.

அதன்படியே, இறைவனும் அருள் புரிந் தார்...

மலர்கள் மலர்ந்தன; மணம் வீசின!

மணம் வந்த திசை நோக்கி வண்டினங்கள் ரீங்காரம் பாடி வந்தன.

அதன் எழில் கண்டு, கவிதொடுக்க வந்தார் கள், கவிஞர்கள்.

அவற்றிற்குப் புகழ் சேர்க்கக் கன்னியர்கள் புடைசூழ்ந்தனர்.

மலர்கள் எல்லாம் மகிழ்ந்தன!

காலை கழிந்து, மாலை நெருங்கியது!

மலர்களுக்குப் புகழும் ஓங்கியது.

அந்தப் புகழோடேயே மலர்களும் உதிர்ந்தன – முழு மனநிறைவோடு!

❖

12. உழைப்பு

மாட்டைப் பார்த்து ஆடு சொன்னது: “பார்த்தாயா என்னை? நீயும் நானும் ஒரே வீட்டில்தான் வளர்கிறோம். நீ நாள் முழுதும் உழைக்கிறாய், நான் மேய்வதோடு சரி...”

மாடு மவுனம் கொண்டது. பின், “மாடாகப் பிறந்தால் உழைக்கத்தானே வேண்டும்” என்றது.

அந்த ஆடு நன்கு வளர்ந்ததும் கசாப்புக் கடைக்காரருக்கு விற்பதற்காக ஆட்டை நகரத்திற்குக் கொண்டு சென்றான், ஆட்டின் சொந்தக்காரன்.

அதுவும் அந்த மாடு பூட்டிய வண்டி யில்!

எதையும் அறியாத ஆடு, மாட்டிடம், "பார்த்தாயா! நீ இழுக்கும் வண்டியிலே நான் சொகுசாக வருகிறேன். நீயோ பாவம்... வருந்தாதே!" என்று ஆறுதலாய் மொழிந்தது.

மாடு சிரித்துவிட்டு, மெள்ளச் சொன்னது: "என் வருத்தமெல்லாம், உன்னைப் பற்றித் தான்... உன் வாழ்வின் கடைசிப் பயணத் திற்காக நான் துணை நிற்கிறேனே...!

சொகுசுவின் முடிவும்; உழைப்பின் பெருமை யும் உனக்கு எங்கே புரியப் போகிறது?" என்று கூறியது மாடு.

ஆடு ஒன்றும் புரியாமல் ஜாலியாக, மாடு சொன்னதைக் காதில் போட்டுக் கொள் ளாமல் பயணம் செய்துகொண்டு இருந்தது...!

❖

13. ஆணவம்

“என்னைத்தான் எரியச் செய்துவிட்டாயே. பின் ஏன் அக(ல்) உடலிலேயே நீ உன் கல்லறையை அமைத்துக் கொண்டாய்?” என்று எரியும் விளக்குக் கேட்டது.

முகம் கறுத்து எண்ணெயில் மூழ்கிக் கிடந்த தீக்குச்சி அமைதியாக இருந்தது.

தென்றலாக நடந்துகொண்டிருந்த காற்று, ஏனோ புயலாகத் தொடங்கியது.

காலம், திரி நாக்கைக் கரியாக்கியது. தீபப் பெண் கோர நாட்டியமாடினாள்!

“ஐயோ, என் உயிர்போய் விடும்போல் இருக்கிறதே...” அழுது புலம்பியது, திரி.

தீக்குச்சி இடம் மாறியது. திரி நகர்த்தப் பட்டது.

ஒளி வெள்ளம் கூடியது. தீபப் பெண், முகம் சிவந்து மகிழ்வோடு தீக்குச்சியை நன்றிப் பூக்கள் மலரப் பார்த்தது.

தீக்குச்சியோ அமைதியாய் இருந்தது!

❖

14. நம்பிக்கை

குளத்தில், தாமரையும், அல்லியும் வளர்ந் திருந்தன.

அல்லி இரவில் மலர்ந்து மகிழ்ந்தது. தாமரை பகலில் மலர்ந்து மகிழ்ந்தது.

நெருங்கிய இரண்டுக்குமே பொறாமையும், மனப்பூசலும் மனித மனம்போல...!

தாமரை மலர்ந்திருக்கும்போது அல்லி பொறாமையோடு அதைப் பார்க்கும், நீர்த்துளியாய் கண்ணீர் சிந்தும்.

இரவில் அல்லி பூத்திருக்கும்போது தாமரைக்கும் பொறாமை, பனித்துளியாய் அழும்.



இப்படி ஒன்று மாற்றி ஒன்று அழுவதைக் கண்ட குளத்திற்குக் கோபம் கோபமாக வந்தது...

"ஏ... மலர்களே, ஏன் இப்படி அழுது தொலைக்கிறீர்கள்?

மலர்ந்திருக்கும்போது சிரிக்கிறீர்கள். அது போல குவிந்திருக்கும் போதும் நாளை மலரப் போகும் வாழ்வை எண்ணி மகிழுங் களேன்..." என்று அறிவுரை சொன்னது.

பின்பு அங்கே...

நம்பிக்கை மலர்களோடு, அல்லியும், தாமரையும் பூக்கத் தொடங்கின!

❖

• *(தாமரையும் அல்லியும் எட்டு நாள் வரை, குவிந்தும் மலர்ந்தும் இருக்கும் தன்மை கொண்டவை.)*

15. சிரிப்பு

"அலைப் பெண்ணே, என்னில் மோதி ஏன் நீ உன் அழகுமேனியை சிதைத்துக் கொள்கிறாய்?" என்று கடலோரம் இருந்த பாறை அலையைக் கேட்டது.

அலைப் பெண் நீர்த்துளியாய்ச் சிரித்தபடியே, அதன் மீது மோதியபடியே சொன்னது....

"நான் கரையைக் காணக்கூடாது என்று எண்ணி, என் வழியை மறித்து நிற்கிறாயே, உன்னை அழித்துவிட்டு, அப்புறம் போகத்தான் உன்னை மோதுகிறேன்..." என்றது.

கரும்பாறை மேனியை நனைத்து குளித்தபடியே சிரித்துக் கொண்டது...



அலையோ, அதன்மீது மோதி மோதிச் சிரித்தபடியே இருந்தது.

இந்த யுத்த காண்டம் என்று முடியுமோ என்று முத்துக்கள் நகைத்தன, கடலுக்குள்!

❖

16. யார் விடை கூறுவது?

தீப்பெட்டி அவன் கைகளில் ஆட்டம் போட்டது.

ஆறு சுவருக்குள் இருந்த ஐம்பது கைதிகளுக்குள்ளும் மகிழ்ச்சிப் பெருக்கு.

'நம்மில் யாருக்கு முதலில் விடுதலை?' ஒன்றை ஒன்று உற்றுப் பார்த்துக்கொண்டன. கேட்டுக் கொண்டன.

ஒன்றுக்கு விடுதலை கிடைத்தது!

அவனின் உதட்டு இடுக்கில் உற்சாகமாக சிகரெட்டு நிமிர்ந்து நின்றது.

பெட்டியில் – குச்சி உரசப்பட்டது.

"அடப்பாவமே!... ஒருவனுக்குத் தீங்கு வைக்கவா நாம் விடுதலை ஆனோம்? ஒரு



அகல் விளக்கில் ஒளி ஏற்ற நம் விடுதலை இருக்கக் கூடாதா? திருக்குறளைப் படிக்க ஒளி ஏற்றி இருக்கக் கூடாதா?" என்று முகம் கறுத்து, அவன் கையில் நின்றது.

சிகரெட்டின் முகத்தில் சூரிய உதயம்!

சிகரெட் சிரித்தபடியே, "அடப்பாவமே! என்னை அழித்துவிட்டதாக சிலிர்த்த; சிரித்த தீக்குச்சியே உன் முகத்தில் ஏன் கரிப் பூச்சு?"

இவைகளுக்கு யார் விடை கூறுவது?

❖

17. முகமூடி !

நரி வருத்தத்தோடு மரத்தடியில் உட்கார்ந் திருந்தது.

அந்த வேளையில், அங்கே வந்த குதிரை ஒன்று நரியைப் பார்த்து,

“ஏன் நரியாரே சோகமாக உட்கார்ந்து இருக்கிறீர்?” என்றது.

“வருத்தப்படாமல் எப்படி அண்ணா இருக்க முடியும்? என் உணவுக்கு ஒரு கோழியைப் பிடிக்கவே பாதிநாள் செலவாகி விடுகிறது.

சில நேரங்களில் நல்ல கோழிகளே கிடைப்ப தில்லை, இங்கே.”

“அட, இதற்கா நீ கவலைப்படுகிறாய்? இதோ, இப்போது நான் நகரத்துக்குத்தான் போய் வருகிறேன்.

அங்கெல்லாம் எவ்வளவு கோழிகள்; பண்ணைகள்... ஒரு கோழியைக் கூட உன்னால் தின்ன முடியாது. அவ்வளவு பெரியது...”

“அப்படியா...?” வியப்போடு கேட்டது நரி. குதிரை சென்றபின், நரி சிந்திக்கத் தொடங்கியது.

‘நாம் நாமாகச் செல்லக் கூடாது. அப்படிச் சென்றால், நம்மை மக்கள் அறிந்துகொள் வார்கள். அப்புறம் அடித்துப் போட்டுவிடு வார்கள்.

வேறு எப்படிச் செல்வது...?’

நகரத்திற்குப் பயணப்பட்ட நரி, நாயின் முகமூடியைப் போட்டுத் தன் முகத்தை மறைத்துக்கொண்டு, குளக்கரை ஓரம் தன் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டது.

இருள் சூழ்ந்தது...



நரி மெள்ள புதரிலிருந்து எழுந்தது; கோழிப் பண்ணையை நோக்கி நடந்தது.

'அடேயப்பா... இவ்வளவு கோழிகளா?'

இவ்வளவு கோழிகளை ஒருசேர கண்டிராத நரியின் நாக்கில் நீர் ஊறியது.

'அடடா... எத்தனை நாளை, நாம் வாழ் நாளில் வீணாக்கிவிட்டோம்...' என்று நினைத்தபடியே ஒரு பெரிய கோழியைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு, புதரை நோக்கி ஓடியது.

'என்ன சுவை... என்ன சுவை...' என்றபடியே தின்றுமுடித்து, சுகமாகத் தூங்கியது.

இப்படியே நாள்கள் பல நகர்ந்தன: நரியார் கொழுத்துப் போனார்.

பண்ணை முதலாளிக்கு, 'தினமும் ஒரு கோழி எப்படி குறைகிறது...'

சந்தேகம், சாட்டையாய் இதயத்தில் பின்னிக் கொண்டது...

நரி வழக்கம்போல் பண்ணையுள் நுழைந்தது...

அங்கே, படுத்துக் கிடந்த பசுவை அலட்சிய மாகப் பார்த்துக்கொண்டே ஒரு கோழியைப் பிடித்துத் திரும்பியது!

அவ்வளவுதான்...

அடுத்த நொடியே நரியின் இடுப்பில், இடியாய் ஒரு அடி விழுந்ததும் கோழியை விட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தது...

அங்கே...

பசுமாட்டின் முகமூடியோடு பண்ணையார் நின்றிருந்தார்.

'நாம்தான் அறிவாளி என்றிருந்தோம். இந்த மனிதர்கள் நம்மைவிட 'அறிவாளி'கள்.

இவர்கள் நம்மையும் சேர்த்துச் சாப்பிட்டுவிடு வார்கள்...

நம் காட்டில் சண்டையில்லை; பொறாமை இல்லை. எல்லாம் இந்த மனித நாட்டில்தான் இருக்கிறது.

இனி தவறியும் மனிதர்கள் வாழும் நாட்டிற்கு வரவே 'கூடாது' என்று எண்ணியபடியே ஒடிந்த காலோடு ஓடிக்கொண்டிருந்தது, நரி!

❖

18. பட்டையும் 'பட்டை'யும்

எப்போதும் தன் பக்கத்தில் அமர வைத்து ஆலோசனைகளைக் கேட்ட – கேட்டுப் பாராட்டிய சிங்கராஜா, யாரோ செய்த தவறுக்காக இந்த நரியாரைக் காடு கடத்தி இருக்க வேண்டாம்.

என்ன செய்வது, தண்டனை, காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

உலகம் விரிந்து பரந்தததுதானே, நரியாரும் வெளியேறிவிட்டார்.

நரியார், நடந்தார்... நடந்தார்... நடந்து கொண்டே இருந்தார்.

களைப்பு அவரின் கால்களைத் தட்டி விட்டது. பசியோ வயிற்றைச் சுட்டது.

பாதை ஓரம் சிறிது தொலைவில் தனித்து நின்ற ஒரு மரம் கண்ணில் பட்டதும், வேக வேகமாக அங்கே நடந்தார், நரியார்.

புங்கைமர நிழல் விரிப்பில் காலை விரித்துச் சாய்ந்தார்; படுத்தார், நரியார்...

சூரியன் மேற்கில் விழவும், நரியார் எழவும் சரியாக இருந்தது!

நடந்த களைப்பு கொஞ்சமே அகல, வயிற்றுப் பசி – பிசைவு அதிகமாகி இருந்தது, நரியாருக்கு.

தூரத்தில் எங்கோ பேச்சின் சப்தம், காதைத் திசை திருப்பிக் கேட்டார்; நிழலை விட்டு நடந்து பார்த்தார்.

அங்கே, ஒரு பசிபோக்கும் சித்தர் மடம். அதன் முன்னே பலர் வரிசையில் நின்று உணவைப் பெற்று வயிற்றை ஈரமாக்கிக் கொண்டிருந்தனர்.

நரியாரும் வயிற்றில் பசி நெருப்போடு வரிசையில் நின்றார். நின்றதோடு சரி...

பட்டைச் சோறு அதற்குக் கிடைக்கவில்லை; அடுத்தவர்களுக்குக் கிடைத்துக்கொண்டு இருந்தது.

நரியாருக்குக் கோபம் வந்தது; மேலும் பசி மூண்டது; மூளை கனத்தது.

'ஏன் நமக்குத் தரப்படவிலை?' சிந்தித்தார்... சிந்தித்தார்... மற்றவர் முகத்தை உற்றுப் பார்த்த நரியார்... இறுதியில்...

அவர் மூளையில் வெளிச்சம் பளிச் சிட்டது.

அருகில் இருந்த குயவரின் அடுப்புச் சூளையை நோக்கி நரியார் ஓடினார்....

சாம்பலை எடுத்தார்; நெற்றி நிறைய பட்டையை அடித்தார், பின் வரிசையில் சென்று நின்றார்.

வரிசையோ வயதானவரைப் போல் நடந்து கொண்டு இருந்தது.

அவரின் வயிற்றுக்குள்ளோ பசி மின்னலாய் ஓடிக்கொண்டிருந்தது.

நரியாரின் முறை வந்தது...

கையேந்தினார்; வேண்டிய மட்டும் பட்டைச் சோறு கிடைத்தது...

சிறிது நேரத்திற்கு முன்பு கிடைக்காத இந்தப் பட்டைச் சோறு, இப்போது எப்படி கிடைத்தது...?

எல்லாம் இந்தப் 'பட்டை'யால்தானோ?

சாப்பிட்டு முடிக்கும் வரை நரியார் தான் போட்டுக் கொண்ட 'பட்டை வேடத்தை' அழிக்கவே இல்லை. சிறிது நேரத்தில்..

பசி தீர்ந்தது; பட்டை அழிந்தது; நரியாரின் பயணம் தொடர்ந்தது.

இங்கே மனிதர்கள் நேரத்திற்கு நேரம் போடும் வேடத்தைப் போல் இந்த நரியார் தன் வாழ்நாளில் எத்தனை எத்தனை வேடம் போடப் போகிறாரோ...?

❖

நூலாசிரியர் பாபநாசம் குறள்பித்தன் சிறுவர் இலக்கியத்திற்காக தமிழக அரசு உள்ளிட்ட பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்றவர்.

சிறுவர் சிறுமியருக்காக மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் கதைகள் சிறந்த வாழ்வியல் கருத்துகளை அழகிய உவமைகளுடன் கூறுபவை. அழகிய ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

இலக்கியச் செறிவுமிக்க இச்சிறுகதை நூலைப் பள்ளி மாணவ, மாணவியர் விரும்பிப் படிப்பர்.

APPLE BOOKS®
© Publishers
Apple Publishing International (P) Ltd.
130, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 600 029. India.
Ph : +91 44 3244 0099, +91 44 3246 4677 Fax : +91 44 2374 1188
Email : cs@applebooks.org Website : www.applebooks.org

SCAN ME

APPLE BOOKS
50.00

www.applebooks.org
ISBN 978-93-5055-165-3
T-0850
9789350551653